1995 மே 2]

517—

சேலம் நகராட்சிக்குப் புதிய வளாகம்

***14413—திரு. க. அர்ச்சுனன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) சேலம் நகராட்சி, மாநகராட்சியாக்கப்படும்பொழுது புதிய வளாகம் தேவைப்படுமாதலால், மாநகராட்சி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகிய அலுவலகங்கள் ஒரே இடத்தில் அமைகிற வகையில் இடம் தேர்வு செய்யப்படுமா?

(ஆ) சேலம் மத்திய சிறைச்சாலைக்குச் சொந்தமான நிலம் காலியாக உள்ளதால், இந்த இடம் தேர்வு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சேலம் நகராட்சி, மாநகராட்சியாக விரிவுபடுத்தும்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மற்றும் மாநகராட்சி அலுவலகம் ஒரே இடத்தில் அமைக்கப்படத் தக்க ஆக்கிரமிப்பற்ற பெரிய நிலப்பரப்பு அரசு புறம்போக்கு நிலம் எதுவும் சேலம் வட்டத்தில் இல்லை.

(ஆ) சேலம் மத்தியசிறைச் சாலை அருகாமையில் உள்ள நிலம் சிறை பாதுகாப்பு கருதி அரசு மேற்படி நிலங்களில் பராதீனம் ஏதும் செய்யக்கூடாதென தடைவிதித்துள்ளதால் அந்நிலத்தினையும் தேர்வு செய்ய இயலாது.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் நகராட்சியானது இன்றையதினம் மாநகராட்சியாக ஆகியிருக்கிறது. பழைய நிலையில் 44 வார்டுகள் இருந்தன. தற்போது 72 டிவிசன்களாக மாற்றப்பட்டு, 95 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு விரிந்து உள்ளது. மிகக் குறுகிய அலுவலகமாக இன்றையதினம் செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. ஆகவே, அதற்கு அருகாமையில் உள்ள மாநகராட்சிப் பள்ளியை இத்துடன் இணைத்தால், மாநகராட்சிக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டு மிகச் சிறப்பாக செயல்பட வசதியாக இருக்கும். அதேநேரத்தில், தற்போது இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகமும் மிகச் சிறியதாக இருக்கிற காரணத்தால், எல்லாமே அருகாமையில் இருக்கின்ற

காரணத்தால் இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து, சேலம் சென்ட்ரல் ஜெயில் பக்கத்தில் இருக்கிற அந்த நிலத்திலே அமைக்கப்படுமா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிர்வாகமும், நகராட்சி நிர்வாகமும் இந்த இரண்டு நிர்வாகங்களும் இரண்டு வேறுபட்ட துறைகளாகும். ஆகவே, மாநிலத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்துடன், மாவட்ட நிர்வாகம் தொடர்புடைய அலுவலகங்கள் மட்டும்தான் ஒன்றாக அமைந்து இருக்கின்றன. இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை விரிவுபடுத்த போதிய நிதி ஒதுக்கீடு இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருக்கிற, மாநகராட்சிப் பள்ளியிலே இருக்கிற இடத்தை விரிவுபடுத்த முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 518. திரு. செது. வரதராஜன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

518—

செங்கல்பட்டு மலைப்பகுதிகளுக்குக் குடிநீர் வசதி

***22855**--*திரு. செ. து. வரதராஜன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு நகரைச் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் வாழும் மக்களுக்குக் குடிநீர் தடையின்றிக் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.எம்.செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கற்பட்டு நகரைச் சுற்றியுள்ள மலைப் பகுதியில் குறிப்பாக, தட்டான் மலை மற்றும் நத்தம் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு போதிய குடிநீர் வசதியளிக்க ரூ. 15 லட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் குடிநீர்த் திட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு வருகிறது. விரைவில், இந்தத் திட்டம் முடிக்கப்பட்டு, மக்கள் பயனுக்குக் கொண்டுவரப்படும்.

திரு. செது. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு பகுதியில் உள்ள தட்டான் மலைப் பகுதியில் ஒரு